வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
ந,க.எண்.311/அ1/2023 நாள் : 16 .06.2023

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – இளநிலை உதவியாளர் / தட்டச்சர்கள்/ சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–3 ஆகியோர்களுக்கு – உதவியாளராப் பதவி உயர்வு / பணிமாறுதல் வழங்குவது– 15.03.2023 நிலவரப்படி தகுதி பெற்றவர்கள் முன்னுரிமைப் பட்டியல் வெளியிடுதல் – தொடர்பாக.

பார்வை
1. அரசாணை எண்.97 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை நாள்.14.02.1996.
2. அரசாணை எண்.16 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை நாள்.21.02.2002.
3. தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநர் (பணியாளர்தொகுதி)செயல்முறைகள் ந.க.எண்.000101/அ4/இ3/2023 நாள்.06/01/2023, 24.04.2023 மற்றும் 13.5.2023
4. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர்தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.32756/அ4/இ3/2023 – 1 நாள்.14.6.2023

மேற்காணும் பொருள் சார்பாக பார்வை (4)ல் காணும் செயல்முறைகளில் தெரிவித்துள்ளவாறு 15.03.2023 நிலவரப்படி இளநிலை உதவியாளர் / தட்டச்சர்கள்/ சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–3 லிருந்து உதவியாளராக பதவி உயர்விற்கு தகுதியான தேர்ந்தோர் பெயர்பட்டியல் வெளியிடப்பட்டது. அப்பட்டியலின்படி பதவி உயர்வு வழங்கப்பட்டவர்களைத் தவிர்த்து அடுத்து உள்ள 119 நபர்களுக்கான பட்டியல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. 15.03.2023 க்கு தகுதி பெற்ற நபர்கள் மற்றும் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் பதவி உயர்வு தற்காலிகமாக துறந்தவர்கள் (Relinquishment) இருப்பின் அவர்களை 15.03.2023 பெயர் பட்டியலில் சேர்க்க இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் உள்ள விவரங்கள் பூர்த்தி செய்து அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பார்வை (1)ல் காணும் அரசாணையின்படி 14.02.1996 மற்றும் அதற்குப் பின் இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்றவர்களுக்கு இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பார்வை (2)ல் காணும் அரசாணையின்படி உதவியாளர் பதவிபெற தகுதியுள்ள தட்டச்சர்கள் 15.03.2023 அன்றைய தேதியிலோ அல்லது அதற்கு முன்போ ஒரு வருட காலம் இளநிலை உதவியாளர் பயிற்சியினை பெற்றுள்ளார்கள் என்பதற்கான சான்றினை சார்ந்த பணியாளர் பணிபுரியும் அலுவலகத் தலைவரிடம் பெற்று இணைத்தல் வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை – III லிருந்து பணிமாறுதல் மூலம் உதவியாளராக பதவி உயர்வு பெற தகுத பெற்றுள்ள ( சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை– III பணியில் ஐந்தாண்டு காலம் பணி முடித்திருத்தல் வேண்டும்).

மேற்காணும் பட்டியலில் சேர்க்கை, நீக்கம் மற்றும் திருத்தம் இருப்பின் அதன் விவரங்களையும் ( ஏற்கனவே மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் பதவி உயர்வினை துறந்தவர்கள் இருப்பின் அவர்களை சேர்க்கும் பொருட்டும்) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி – 4 (2007–2008 மற்றும் 2012 – 2013) ஆம் ஆண்டிற்கான தேர்வு செய்யப்பட்டு 04.02.2013 அன்று பணிவரன்முறை செய்யப்பட்ட பணியாளர்களில் (தேர்வாணைய பட்டியல் வரிசை எண்.350 வரையுள்ள) 15.03.2023 பட்டியலுக்கு தகுதிபெற்ற பணியாளர்கள் சார்பான விவரங்களை மட்டும் அனுப்பி வைக்க தெரிவிக்கப்படுகிறது. ஒவ்வொரு பணியாளர் சார்பிலும் தனித்தனி விவரப்படிவம் அனைத்து கலங்களும் விடுபடாது பூர்த்தி செய்து தொடர்புடைய ஆவணங்களை இணைத்து 19.06.2023 காலை 11.00 மணிக்குள் இவ்வலுவலகத்தில் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

தகுதிவாய்ந்த பணியாளர்கள் பெயர் ஏதும் தொகுப்பு பட்டியலில் விடுபட்டிருப்பின் சார்ந்த அலுவலர்களே முழு பொறுப்பேற்க நேரிடும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு.
1.119 நபர்களுக்கான தற்காலிக முன்னுரிமைப் பட்டியல்
2. படிவம்.

(ஒம்) க. முனுசாமி
முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர் – 9.

பெறுநர்

1. கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
   ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, காந்திநகர், வேலூர்.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக்கல்வி / தொடக்கக்கல்வி / தனியார் பள்ளிகள்)
   வேலூர் மாவட்டம்.
3. அரசு / நகராட்சி உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்,
   வேலூர் மாவட்டம்.

ப..ரா.,